


முஹம்மது சித்திக் கான் (Mohammed Sidique Khan) என்கிற லண்டன் கான். ஷேஸாத் தன்வீர் (Shehzad Tanweer). ஜமால் லின்ஸே (Jamal Lindsay). ஹஸீப் ஹுஸைன் (Hasib Hussain).

இந்த நான்கு பெயர்களைக் கண்டிப்பாக யாரும் கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள். அல் காயிதாவின் அட்டண்டன்ஸ் ரிஜிஸ்தரில்கூட, இந்தப் பெயர்கள் கிடையாது. ஆனால், ஜூலை 7, 2005-ல் நடைபெற்ற லண்டன் தொடர் வெடிகுண்டுத் தாக்குதலில், அல் காயிதாவின் ஆயுதங்களாகப் பயன்பட்டவர்கள் இந்த நான்கு பேர்தான்.

ஆனானப்பட்ட இங்கிலாந்து காவல்துறையும், உலகப் புகழ்பெற்ற அவர்களது உளவுத்துறையான வி16 அமைப்புமே சம்பவம் நடந்த கொஞ்ச காலத்துக்கு, இது அல் காயிதாவின் கைங்கர்யம்தான் என்பதைக் கண்டே பிடிக்க முடியாமல் திணறினார்கள். அதைவிட காமெடி, பாதாள ரயில் குண்டுவெடிப்பு குறித்து ஆராய்ந்தபோது, முதலில் 'கண்டுபிடிக்கப்பட்ட' விஷயம், இது மின்சாரக் கோளாறினால் ஏற்பட்டது என்பதுதான்! சர் இயான் ப்ளேர் (sir ian Blair) என்கிற லண்டன் மெட்ரோபாலிடன் போலீஸ் கமிஷனர்தான், தலையில் அடித்துக்கொண்டு, இது தீவிரவாத வேலை என்று எடுத்துச் சொன்னார்.

பொதுவாக, இம்மாதிரி பெரிய அளவில் ஏதாவது தீவிரவாதச் செயல் திட்டமிடப்பட்டால், விஷயம் எப்படியாவது உளவுத்துறைகளுக்குத் தெரிந்துவிடும். நேரடியாகத் தெரியாவிட்டாலும், என்னமோ கெட்ட வாசனை அடிக்கிறதே என்று மோப்பம் பிடித்து, ஒரு பொதுவான அபாய அறிவிப்பாவது வெளியிடுவார்கள். செப்டெம்பர் 11 சம்பவத்தின்போது, இப்படித்தான் அமெரிக்க உளவுத்துறை எஃப்.பி.ஐ.க்கு அவ்வப்போது கெட்ட வாசனை அடித்தது. ஓரிரு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளையே நெருங்கிப் போயும் பிடிக்கமுடியாமல் போயிருக்கிறது.

ஆனால், இந்த லண்டன் குண்டுவெடிப்பைப் பொறுத்தவரை, இம்மாதிரியான துளி சந்தேகமும் வந்துவிட முடியாதபடிக்குக் காரியத்தைக் கச்சிதமாக முடிக்க, மேற்படி நால்வர் அணிக்குப் பயிற்சி கொடுத்தது அல் காயிதா.

ஒசாமாவும் அவரது உடன்பிறப்புகளும் அப்போது (இப்போதும்) ஆப்கனிஸ்தானில்தான் இருந்தார்கள். ஒரு பக்கம் அமெரிக்க ராணுவம் தரைவழி, கடல் வழி, விமான வழி, சாட்டிலைட் வழி என்று சகல வழிகளிலும் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தது. மறுபக்கம் அல் காயிதாவின் அத்தனை ஐரோப்பிய வாசல்களும் அடைக்கப்பட்டுவிட்டிருந்தன. முன்னைப்போல் பணப்புழக்கம் கூட அவ்வளவாகக் கிடையாது. வெளி நாட்டுப் பயிற்சி முகாம்களெல்லாம் மூடப்பட்டு நீண்டநாள் விடுப்பு விடப்பட்டிருந்தது. இந்தப் பக்கம் பாகிஸ்தான் தலைவலி, ஆப்கனிஸ்தானில் ஹமீத் கர்சாய் திருகுவலி, எங்கே போனாலும் ஆதரவின்மை என்று ஏழரைச் சனி காலம்தான்.

ஆனாலும், இந்தத் திட்டத்தை அல் காயிதா எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியது என்பதைத் தெரிந்துகொண்டால், அல் காயிதாவின் நெட் ஒர்க் பலம் எப்படிப்பட்டது என்பது புரிந்துவிடும்.

இப்போது அடியைப் பிடிக்கலாம். முதல் வரியில் பார்த்த அந்த நாலு பேர். யார் இந்த இளைஞர்கள்?

இவர்கள் நான்கு பேருமே தீவிரவாதத் துறைக்குப் புதியவர்கள். ஐரோப்பாவிலேயே பிறந்து வளர்ந்த முஸ்லிம் இளைஞர்கள். அடிப்படையில் மேற்கத்திய ஜனநாயகத்தின் மீதும் ஐரோப்பிய நாடுகளில் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவது குறித்தும் விமர்சனங்கள் கொண்டவர்கள். ஒரு சிறு கோபம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். மற்றபடி, ஆயுததாரிகளாக மாறுவார்கள்; அவர்களே ஆயுதங்களாகவும் மாறுவார்கள் என்றெல்லாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்த நான்கு பேர் டீமின் தலைவனான முஹம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான்தான், வயதில் கொஞ்சம் மூத்தவன். (1974 அக்டோபர் 20-ம் தேதி லீட்ஸ் நகரில் பிறந்தவன்.) பள்ளிப்படிப்பையெல்லாம் சமர்த்தாக முடித்துவிட்டு, லீட்ஸ் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புக்காகப் போய்ச் சேர்ந்து ஒழுங்காகப் படித்துக்கொண்டும் இருந்தான். 2001-ம் ஆண்டு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முஸ்லிம் பெண்ணான ஹஸீனா பாட்டீல் என்பவரைத் திருமணமும் செய்துகொண்டான். 2004-ம் ஆண்டு மரியம் என்கிற பெண்குழந்தை ஒன்று இவனுக்குப் பிறந்தது. ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில், வெளிநாடுகளிலிருந்து வந்து சேரும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் உன்னதமான உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவன். உடன் வேலை பார்த்தவர்கள் கருத்துப்படி, கான் ஒரு சமர்த்து வாத்தியார். ரொம்ப சாதுவும் கூட. 'அவனா தீவிரவாதி?!' என்று அத்தனை பேரும் பிற்பாடு பேப்பர் பார்த்து வாய் பிளந்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் அவன் குண்டுவைக்கப் போன சமயத்தில், அவன் மனைவி இரண்டாவது முறையாகக் கருத்தரித்து, நிறைமாத கர்ப்பிணியாக வேறு இருந்திருக்கிறாள். அழகான குடும்பம், குழந்தை, உத்தியோகம், இன்னொரு புது வரவு என்று இருந்த ஒருவன், எப்படி மனித வெடிகுண்டாக மாறமுடிந்தது?

அதுதான் அல் காயிதா. எப்படிச் செய்தார்கள் என்று பார்ப்போம்.

இங்கிலாந்தின் தலைநகரத்தில் ஒரு தீபாவளி கொண்டாடிவிடுவது என்று அல் காயிதா முடிவு செய்தது. அமெரிக்காவுக்கு உண்டாக்கிய அதே அதிர்ச்சியைக் இங்கும் வழங்கவேண்டும் என்பதுதான் நோக்கம்.

தனது இங்கிலாந்து செல்லில் இருக்கும் ஆட்களை விட்டு நோட்டம் பார்க்கச் சொன்னார்கள். யார் யார் தீவிர முஸ்லிம்கள்? யார் யார் இங்கிலாந்து அரசின்மீது வெறுப்பில் இருக்கிறார்கள்? யாரை எளிதில் கரைக்க முடியும்? யாரை பேசிப்பேசி மாற்றமுடியும்?

இப்படித் தேடியபோது, அகப்பட்டவர்கள்தான் கானும் அவனது நண்பர்களும். அத்தனை பேருமே இளைஞர்கள். அத்தனை பேரும் இஸ்லாத்தில் தீவிரப் பற்றும் மதத்துக்காக ஏதேனும் செய்யவேண்டும் என்கிற எண்ணமும் உள்ளவர்கள். பணியாற்றும் நேரம் போக, ஒரு சிறு நட்பு வட்டமாக ஒத்த சிந்தனை உள்ள முஸ்லிம்களை ஒருங்கிணைத்து சிறு கூட்டங்கள் நடத்துவது, ஆன்மிகச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வது போன்ற காரியங்களை இவர்கள் செய்துகொண்டிருந்தது, கூடுதல் தகுதியாகக் கருதப்பட்டது. தவிரவும் 'ஹமாரா ஹெல்த்தி லிவிங் சென்டர்' (Hamara Healthy living Centre) என்றொரு ஆரோக்கிய அமைப்பையும் தொடங்கி, எளிய மருத்துவச் சேவைகளும் செய்துகொண்டிருந்ததாகத் தெரிகிறது.

ஆகவே வளைக்கப்பட்டார்கள்.

எங்கிருந்து, யார் மூலம் அழைப்பு வந்தது என்றே தெரியவில்லை. ஆனால், கானுக்கு திடீரென்று ஒருநாள் பாகிஸ்தானுக்கு வரும்படி ஓர் அழைப்பு வந்தது. ஏதோ இஸ்லாமிய அமைப்பின் பெயரில் அனுப்பப்பட்ட அழைப்பு. கௌரவ விருந்தினராக வரச்சொன்ன அழைப்பு.

ஆகவே புறப்பட்டுப் போனான். விசா, போகவர செலவுகள் அனைத்தையும் ஏற்பாடு செய்து யாரோ அழைக்கிறார்கள் என்றால் கசக்கிறதா? அதுவும் தன்னுடைய மதச் சேவைகளைக் கவனித்து யாரோ பாராட்ட அழைக்கிறார்கள் என்னும்போது?

அப்படி பாகிஸ்தான் போன முஹம்மது சித்திக் கான், அங்கிருந்து ஆப்கனிஸ்தானுக்கும் அழைத்துச் செல்லப்பட்டான். கொஞ்சம் கொஞ்சமாக மூளைச் சலவை செய்யப்பட்டது. மதத்துக்குச் செய்யும் சேவை என்பது என்ன? பிற மதத்தவர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பதைக் காட்டிலும் பெரிய சேவை இருக்கமுடியாது. எப்படிக் காப்பது? அச்சமூட்டுவதன் மூலம் அதனைச் செய்யமுடியும். எப்படி அச்சமூட்டுவது? சில அதிரடிக் காரியங்களின் மூலம். என்ன அதிரடி? சில கொலைகள். அல்லது பல கொலைகள். ஒரு பெரும் குண்டுவெடிப்பு. உலகையே திரும்பிப் பார்க்கச் செய்வது. ஆனால், உயிர் போகும் அபாயம் இருக்கிறதே?

போனால் என்ன? மதத்துக்காக உயிர் விடுபவர்களுக்குச் சொர்க்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும். இறைவனின் சன்னிதானத்தை விடவா இங்கிலாந்து வாழ்க்கை பெரிது? குடும்பம், குழந்தை?

நீயா அவர்களைக் காப்பாற்றுவதாக நினைத்துக்கொண்டிருக்கிறாய்? இறைவன் பெரியவன். அவன் காப்பாற்றுவான். உன்னை இப்புனிதப் பணிக்குத் தேர்ந்தெடுத்த இந்த இயக்கம் காப்பாற்றும். சரித்திரத்தில் உன் பெயர் காலமெல்லாம் நிலைத்திருக்கும்.

இவ்வாறாகப் பேசிப்பேசி கானின் மனத்தை முதலில் மாற்றினார்கள். அப்புறம் கான் மூலம் அவனது பிற நண்பர்களையும் வளைத்தார்கள். அதன்பிறகு, அடிக்கடி கானும் நண்பர்களும் ஆப்கனிஸ்தானுக்கு ரகசிய வழிகளில் வரவழைக்கப்பட்டார்கள். (இந்த ரகசிய வழி என்பது மிகவும் பேஜாரான ரூட். தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது கூட இல்லை. மூன்று பேர் தலையைச் சுற்றித் தன்னுடைய மூக்கைத் தொடுவது போல. இங்கிலாந்திலிருந்து கனடாவுக்குப் போய் அங்கிருந்து கப்பல் மார்க்கமாக ஏதேனும் ஓர் ஆப்பிரிக்க தேசத்தை அடைந்து, அங்கிருந்து எகிப்து வழியே மத்தியக் கிழக்கின் எல்லையைத் தொட்டு, நாலைந்து தேசங்களைச் சாலை வழியே கடந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸைத் தொட்டு, அங்கிருந்து பாகிஸ்தான், அதன்பிறகு ஆப்கன்.) ஒவ்வொரு முறை பயணம் செய்வதே ஒரு மாத காலத்தைச் சாப்பிட்டுவிடும். அதன்பிறகு, குறைந்தது ஒரு மாதகாலமாவது அங்கே தங்கி, பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். பிறகு, மீண்டும் அதே மூன்று தலை சுற்றி மூக்கைத் தொட வேண்டும்.

இப்படி ஆப்கன் காடுகளில் கான் நண்பர்களுக்கு அடிப்படைத் தீவிரவாதப் பயிற்சிகள் அளித்த பிறகு, அல் காயிதா அவர்களை 'மேல் படிப்பு'க்காக இந்தோனேஷியாவுக்கு அனுப்பியது.

அமெரிக்க ராணுவத்தின் தொந்தரவுகள் இல்லாமல் பயிற்சிகள் நடைபெறவேண்டும். அது ஆப்கனில் சாத்தியமில்லை என்னும்போது, அல் காயிதா அளவுக்கே தகுதியும் திறமையும் படைத்த இன்னொரு அமைப்புதான், அந்தப் பயிற்சியைத் தரவேண்டும். ஆகவே, கூப்பிடு ஜமா இஸ்லாமியாவை.

ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஹம்பாலியின் ஜமா இஸ்லாமியா. இந்தோனேஷியாவின்

நீண்டநாள் தலைவலியாக இருக்கும் ஒரு பயங்கரவாத அமைப்பு. ஆப்கன் யுத்த காலத்திலிருந்து ஹம்பாலிக்கு ஒசாமாவின் மீது மதிப்பும் மரியாதையும் உண்டு. என்னதான் அவர் அப்போது அமெரிக்கச் சிறையில் இருந்தாலும், ஒசாமா ஓர் உதவி என்று கேட்டு ஆள் அனுப்பும்போது, அங்கிருந்தபடியே தன் ஆட்களுக்கு உத்தரவிட்டு, வரும் விருந்தாளிகளைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி ஏற்பாடு செய்தார்.

இதெல்லாம் 2005-ம் ஆண்டு தொடக்கத்திலேயே நடந்துவிட்டது. இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவுக்கு ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு குக்கிராமம் பயிற்சிக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. முதலில் கிராமத்தைச் சுற்றி பாதுகாப்பு வளையங்களை அமைத்தார்கள். ஏகப்பட்ட லேயர்

கள் செக்யூரிட்டி போட்டுவிட்டுப் பயிற்சிகளை ஆரம்பித்தார்கள்.

குண்டுகள் தயாரிப்பதிலிருந்து பாடம். வெடி மருந்துகளை எப்படிக் கையாள்வது? ஒரு புதுப்பெண்டாட்டியைப் போல. தொடுவது தெரியாமல் தொடுவது. படுவது தெரியாமல் படுவது. அப்படியே உருட்டிச் சுருட்டி உள்ளே வைத்து சூடா ஒரு பார்சல்!

விளையாட்டே இல்லை. ஒரு குண்டு வைக்கப் போகிற தீவிரவாதி, ஒரு குண்டு தயாரிக்கத் தெரிந்த விஞ்ஞானியாகவும் இருக்கவேண்டும் என்பதுதான் அல் காயிதாவின் அடிப்படை ரூல். இயற்பியல், வேதியியல், கணக்கு தொடங்கி, எலக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங், மெக்கானிகல் இன்ஜினீயரிங், லாங் ஜம்ப், ஹை ஜம்ப் என்று, ஒரு திட்டத்துக்கு எதெல்லாம் தேவைப்படுகிறதோ, அத்தனையிலும் எக்ஸ்பர்ட் ஆனாலொழிய களத்துக்கு அனுப்பாது அல் காயிதா.

இப்படியாக, இந்தோனேஷியப் பங்காளிகளிடம் பாடம் படிக்க அனுப்பிவிட்டு, கற்றுத் தேறியவுடன் ஆப்கனுக்கு வரவழைத்து பரீட்சை செய்து பார்த்தார்கள். திருப்தி என்று மேலிடங்கள் முடிவு செய்த பிறகு, பத்திரமாக லண்டனுக்கு அனுப்பி வைத்தார்கள்.

நடுவில் ஏதோ காரணத்துக்காக, கான் மட்டும் ஒருமுறை இஸ்ரேலுக்குப் போய் வந்திருப்பதாகத் தெரிகிறது. எதற்கு என்று தெரியவில்லை. முன்னதாக, 2003 ஏப்ரலில் டெல் அவிவில் நடைபெற்ற ஒரு மூன்றுபேர் படுகொலைச் சம்பவத்துடன், கானின் பெயரை இணைத்துப் பின்னால் லண்டன் குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு ஒரு செய்தி வந்து பல பேரைக் குழப்பியது. ஆனால், கானின் பயக்ர·பியை ஆராய்ந்தால், அவன் 2003-ல் எல்லாம் தீவிரவாதியாக இல்லை என்பது போலத்தான் தெரிகிறது. ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

2004 இறுதியில்தான் கானுக்கு அல் காயிதா தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆண்டு நவம்பர் 19-ம் தேதி பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்துக்கு கானும், இன்னொரு லண்டன் குண்டுவெடிப்புத் தீவிரவாதியான ஷேஸாத் தன்வீரும் வந்து இறங்கியதை, விமான நிலைய சிசி டி.வி. படமெடுத்துப் பத்திரமாக வைத்திருந்திருக்கிறது. குண்டு வெடிப்புக்குப் பிறகு தோண்ட ஆரம்பித்தபோது, மேற்படி வீடியோ க்ளிப்பிங் அகப்பட்டு, கானின் பாகிஸ்தான்- ஆப்கன் தொடர்புகள் அதன்பிறகுதான் உறுதி செய்யப்பட்டன.

எப்படியும் சுமார் ஓராண்டுப் பயிற்சிகள் இருந்திருக்கின்றன. அதன்பிறகுதான் களமிறக்கியிருக்கிறார்கள். பாதாள ரயில் நிலையமும் ஒரு மாநகரப் பேருந்தும். அந்த நாள் ஜூலை மாதம் 7-ம் தேதி என்று நிச்சயிக்கப்பட்டது.